# குளம் தூர் வாரும் பணி தொடங்கியது

**காரைக்கால்**

காரைக்கால் மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின் பேரில், நம் நீர் என்ற திட்டத்தின் அடிப்படையில் கோயில் நிர்வாகங்கள், அரசுத் துறைகள், தனியார் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் உள்ளிட்டவை, தாங்களாகவே ஒவ்வொரு குளத்தை தெரிவு செய்து, தூர் வாரும் பணியை மேற்கொண்டு வருகின்றன.

அதனடிப்படையில், நிரவி கொம்யூன் பஞ்சாயத்து ஊழியர்கள் சொந்த நிதியின் மூலம் நிரவி கீழமனை திருக்குளம் தூர் வாரும் பணியை நிரவி-திருப்பட்டினம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் கீதா ஆனந்தன், மாவட்ட துணை ஆட்சியர் எம்.ஆதர்ஷ் ஆகியோர் நேற்று தொடங்கி வைத்தனர். நிகழ்வில், துணை ஆட்சியர்(பேரிடர் மேலாண்மை) எஸ்.பாஸ்கரன், நிரவி கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் என்.ரவி, ஊழியர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

Scanned with CamScanner